கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 30.05.2025

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தென்னைப் பொருட்களை பதப்படுத்துவதற்கான தொழில் வளர் மையம்

தென்னைப் பொருட்களை பதப்படுத்துவதற்கான தொழில் வளர் மையம் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் அமைச்சர், திரு டி.எம். அன்பரசன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் கூடுதல் தலைமைச் செயலர் முனைவர் அதுல் ஆனந்த், தொழில்துறை ஆணையர் மற்றும் தொழில்துறை மற்றும் வர்த்தக இயக்குனர் திரு எல். நிர்மல் ராஜ், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் பொறுப்பு துணைவேந்தர் முனைவர் இரா.தமிழ்வேந்தன், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல்வர் முனைவர் அ.ரவிராஜ் மற்றும் உணவு பதன்செய் பொறியியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் மு.பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் துவக்க விழா நடைபெற்றது. புது தில்லியில் அமைந்துள்ள உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகத்தின் நிதியுதவியுடன் கூடிய பிரதான் மந்திரி முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ் இந்த தொழில் வளர் மையம், கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், உணவு பதன்செய் பொறியியல் துறையால் நிறுவப்பட்டது.

இந்தத் திட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உணவு பதன்செய் பொறியியல் துறை, மாநில தொழில்நுட்ப பயிற்சி நிறுவனமாகவும் மற்றும் தமிழ்நாடு அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, இத்திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பு முகவமாகவும் செயல்படுகிறது. தனிப்பயன் பணியமர்த்தல் அடிப்படையில் தென்னை விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், அரசு சாரா நிறுவனங்கள், தொடக்கத் தொழில் முனைவோர்களுக்கு இந்த மையம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**